**குளியாப்பிட்டி பல்கலைக்கழக கல்லூரிம் - 2023**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

குளியாப்பிட்டி பல்கலைக்கழக கல்லூரியின் (**''**கல்லூரி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைகக்கழக கல்லூரியால் மீளாய்வாண்டின் போது செலவிடப்படாத மூலதன மானியம் ரூபா 101,891 நிதிக்கூற்றுக்களில் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த | எதிர்காலத்தில் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எழுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் செலவிடப்படாத மூலதன மானிய கணக்கு என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 19 ஆம் பிரிவில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் பல்கலைகக்கழக கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மலக்கழிவுப் போக்குவரத்து முறைமை மற்றும் குழாய் நீர் மற்றும் தொடர்பாடல் முறைமைகள் பெறுமதி இட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைகக்கழக கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட முறைமை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக பெறுமானத் தேய்வு செய்யும் போது சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை கவனத்திற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக முழுவருடத்திற்காகவும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 1,328,901 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டதனால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,230,539 ஆன வீதி முறைமை மீளாய்வாண்டின் கட்டிடக் கணக்கில் நீக்கப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் கிரயம் (Infrastructure Cost) ஆக சொத்துக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யும் அடிப்படையை இனங்கண்டு பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி முறைமை கணக்கிற்குரிய எதிர்காலத்தின் போது பெறுமானத்தேய்வு கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கல்லூரியின் விரிவுரையாளரின் பதவி உயர்வின் காரணமாக நிலுவைச் சம்பளம் செலுத்தும் போது ஏற்பட்ட வழுக்களை சரிசெய்யும் போது திரண்ட நிதியத்தில் சீராக்க வேண்டிய ரூபா 266,132 ஆண்டின் செலவினத்தில் குறைத்து காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திரண்ட நிதியங்களில் சீராக்கத்தின் மூலம் அவ்வாறான பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் சேவையை விட்டுச் சென்ற விரிவுரையாளரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 90,842 முன்னைய ஆண்டு சீராக்கங்களின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்குரிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் திரண்ட நிதியம் | தற்போது வரையில் அவர் செலுத்துவதற்கு இருந்த ரூபா 90,842 தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571(1), (2) மற்றும் (3) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற கூட்டுமொத்தமாக ரூபா 766,766 ஆன காலாவதியான நானாவித வைப்புக்கள், கூட்டுத்தொகை ரூபா 199,621 ஆன நூலக வைப்புக்கள் மற்றும் ரூபா 189,856 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்படுகின்ற 02 இற்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான 04 பழைய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | NVQ பாடநெறியைப் பூர்த்தி செய்வதற்கு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கின்றமையினால் மற்றும் மாணவர்களின் TVEC மற்றும் VIVA தொடர்பாக சமர்ப்பிப்பதற்கும் இறுதியாக பூர்த்தி செய்த சான்றிதழ் பத்திரம் வழங்கும் வரை நிதி நிறுத்தி வைக்கப்பட்டமையால் நூலக வைப்பு அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படவில்லை. | பாடநெறி முடிவடைந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 760 | கல்லூரியின் 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அண்ணளவாக 43 விடயங்கள் தொலைந்து / பற்றாக்குறை தொடர்பாக நிதிப் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 751 | கல்லூரியால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ரூபா 267,840 பெறுமதியுடைய 26 விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1, 7.2, 8.1 மற்றும் 11.7 ஆம் பந்திகள் | கல்லூரியில் 2016 ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் விரிவுரையாளராக நியமனம் பெற்றதில் இருந்து உத்தியோகத்தர் ஒருவர் முறையான பிரகாரம் விடுமுறை அங்கீகரிக்காமல் 2020 நவம்பர் 02 ஆம் திகதி முதல் வெளிநாடு சென்றிருந்தார். அந்த உத்தியோகத்தர் வெளி நாடு செல்லும் போது சேவையில் நிரந்தரமாக்கப்படாமையினால் அவரின் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கல்லூரியின் பணிப்பாளரால் அவர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடப்பட்ட திகதியான 2023 யூலை 19 வரை வினைத்திறமைகாண் காலத்தை நீடித்துதது முதல் அத்திகதியில் இருந்து அவருக்கு சேவையிலிருந்து | எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பம் தொடர்பாக தாபனவிதிக்கோவையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கேட்டு விலகுவதற்கு இடமளிக்கப் பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின செயற்பாட்டு விளைவு ரூபா 23,653,706 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 29,703,687 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,049,981 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் கிடைத்த வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதிவரையில் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பயன்படுத்தப்படுகின்ற 5.41 ஹெக்டேயர் நில அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கல்லூரியின் செலவினத்தில் ரூபா 150,033,529 பெறுமதியுடைய கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அந்த நிலம் கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் நிலத்திற்காக உரிமை கோரும் சான்றிதழையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் இது தொடர்பாக உரிய உயர் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகத்தில் விசாரணை செய்யப்பட்ட போதும் உரிமை கோரும் சான்றிதழ் விநியோகிக்கும் செயற்பாடுகள் காணப்படவில்லை. | கல்லூரிக்கு காணியைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் பாடநெறிக்காக மாணவர்களை சேர்த்தல். அதற்கு முன்னைய ஆண்டில் சேர்த்தலுடன் ஒப்பீடு செய்த போது 04 பாடநெறிகளுக்காக | கொரோனா தொற்று நோய் மற்றும் அண்மைக் காலங்களில் தாக்கமளித்திருந்த பொருளாதார நெருக்கடிகளின் | மாணவர்களை ஆட்சேர்த்தலை மேம்படுத்தும் நோக்கிலும் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்கள் |

மாணவர்களின் பதிவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தில் இருந்து 26 சதவீதத்திற்கு இடையில் மாணவர்கள் குறைவு வீழ்ச்சி காணப்பட்டது. 2015 இன் கல்வியாண்டு முதல் 2022 கல்வியாண்டு வரை பதிவுசெய்த மாணவர்களுக்கிடையே கல்லூரியை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 08 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது. அவ்வாறே கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பித்தது முதல் பதிவு செய்த மாணவர்கள் விட்டுச் செல்வது குறைக்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கின்ற மாணவர்களில் மீளாய்வாண்டு வரையில் வெற்றிகரமாக கல்விசார் பாடநெறிகளை பூர்த்திசெய்யாதிருந்த மாணவர்களின் சதவீதம் 43 இற்கும் 74 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது.

காரணமாக பாடநெறிகளுக்குரிய சிவில் கைத்தொழில்களில் வீழ்ச்சி மற்றும் சிவில் வேலைத்துறையில் தொழில் துறைகளில் ஈடுபடுகின்ற நிர்மாண நிறுவனங்கள் மூடப்பட்டமையினால் மாணவர்களின் விண்ணப்பிக்கும் அளவு குறைவடைந்திருந்ததுடன் சில மாணவர்கள் பாட நெறியைப் பூர்த்தி செய்யாமல் NVQ 05 கட்டத்தின் இறுதியில் பல்வேறு வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்றிருந்தனர்.

பாடநெறிக் கால இறுதிவரை நிறுத்திவைப்பதற்கு தேவையான முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.